இருக்கின்றோம், அப்படி நியமித்தவுடன், உடனடியாக அந்த இடம் பூர்த்தி செய்யப்படும் என்று சொன்னார்கள். தற்போது அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றதா? புதிய மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? தம்பிக்கோட்டை, மேலக்காடு கிராமத்திற்கு புதிய மருத்துவர் நியமிக்கப்படுவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 250 கால்நடை மருத்துவர்களைப் பணியமர்த்துவதற்காக, அரசுத் தேர்வாணையம் மூலம் தேர்வு எழுதியிருந்தார்கள். அது குறித்து நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்த காரணத்தால், இதுவரைக்கும் அவர்கள் நியமனம் செய்யப்படவில்லை. தற்சமயம், அதாவது, இரண்டு, மூன்று வாரங்களுக்கு முன்பு அந்த வழக்கு முடிவு பெற்றுள்ளது. விரைவிலே அரசுத் தேர்வாணையம் 250 கால்நடை மருத்துவர்களை இந்தத் துறைக்குத் தேர்ந்தெடுத்து, அனுப்பவுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், அதன் பின்பு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதிக்கு அவர்கள் பணியமர்த்தப்படுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

10—

மீன் விற்பனை நிலையம்

***3120—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பரம்பிக்குளம் அணைக்கு அருகில் மீன் விற்பனை நிலையம் ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2007 ஜனவரி 22]

(அ) மற்றும் (ஆ) பரம்பிக்குளம் அணைப் பகுதியில் மீன் விற்பனை அங்காடி நிறுவும் முயற்சிகள் ஏற்கெனவே தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு, கைவிடப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களின் நீண்ட நாளைய கோரிக்கையை ஏற்று, மீனவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற வகையில் மீனவர்களுக்கு நல வாரியம் அமைத்துத் தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் ஐயா அவர்களுடைய தலைமையில், பரம்பிக்குளம் அருகில் மீன் விற்பனை நிலையம் இருப்பதால், 12 கிலோ மீட்டர் தூரத்தில் தூணக்கடவு அல்லது சுங்கம் பகுதிக்குச் சென்றுதான் மீன்கள் வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. அங்கே மீன் சாப்பிட விரும்புகிறவர்கள், பொள்ளாச்சி அல்லது ஆனைமலைப் பகுதிக்கு 45 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சென்றுதான் மீன்கள் வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. மேலும், பரம்பிக்குளம் அணையில் ஜிலேபி, குயிலி, கட்லா போன்ற மீன் வகைகள் மட்டும்தான் இருக்கின்றன. மற்ற மீன் வகைகள் எல்லாம் அங்கே இல்லை. பரம்பிக்குளம் அணைக்கு அருகில் மீன் விற்பனை நிலையங்களை ஏற்படுத்தினால், அங்கே வேலைவாய்ப்பும் ஏற்படுத்தலாம்; அரசுக்கு வருவாயும் கிடைக்கும். ஆகவே, அரசு அதனைப் பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம் அணைப் பகுதியில் மீன் விற்பனை அங்காடி நிறுவுகின்ற முயற்சிகள் ஏற்கெனவே தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டன. பரம்பிக்குளம் அணை, அடர்ந்த வனப் பகுதிக்குள் அமைந்துள்ள நீர்த்தேக்கமாகும். இங்கு பொது மக்கள் யாரும் வசிக்கவில்லை. மக்கள் நடமாட்டம்கூட இப்பகுதியில் இல்லை. இந்த அணையின் பணிகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் பொதுப் பணித் துறை மற்றும் வனத் துறைப் பணியாளர்கள் மட்டுமே மிகவும் சொற்ப அளவில் குடியிருந்து வருகின்றனர். ஆகவே, மக்கள் நடமாட்டம் இல்லாத இப்பகுதியில் மீன் விற்பனை அங்காடி நிறுவினால், மீன் விற்பனை நடக்காது என்பதாலும், அங்காடியில் இருப்பு செய்யப்படும் மீன்கள் கெட்டு, அரசுக்கு இழப்பு ஏற்படும் என்பதாலும், இத்திட்டம் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் கைவிடப்பட்டுள்ளது.

[2007 ஜனவரி 22

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வால்பாறை தொகுதியில் டாப் ஸ்லிப், பரம்பிக்குளம் அணையைப் பார்க்க, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் ஏராளமானவர்கள் சுற்றுலாப் பயணிகளாக அங்கே வருகிறார்கள், பார்வையிட விரும்புகிறார்கள். அங்கே வருகின்றவர்கள் மீன் சாப்பிடுவதற்கு விரும்புகின்றார்கள். மேலும், அந்தப் பரம்பிக்குளம் அணைப் பகுதியிலே சுமார் 500 பேர்கள் இருக்கின்றார்கள். அவர்களும் மீன் சாப்பிடுவதற்கு விரும்புகின்றார்கள். ஆகவே அரசு, பரம்பிக்குளம் அணைப் பகுதியில் மீன் விற்பனை நிலையம் ஏற்படுத்துவதற்கு முன்வர வேண்டும், முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக மீண்டும் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பரம்பிக்குளம் அணைப் பகுதியில் ஏற்கெனவே மீன் அங்காடி அமைத்து, சரியான முறையிலே அங்கே அதை நடைமுறைப்படுத்தாத காரணத்தால்தான் அந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. த. தியோடர் ரெஜினால்டு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதியில், தக்கலை, பேட்டை சந்தையில் ஒரு நவீன மீன் விற்பனை நிலையம் கட்டப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளாக மூடிக் கிடக்கிறது. நான் துறை அதிகாரிகளை அணுகிக் கேட்டபோது, மீன்வளத் துறை அதிகாரிகளிடமிருந்து எந்தவிதமான பதிலும் அதற்கு வரப்பெறவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த நவீன மீன் விற்பனை நிலையத்தைத் திறப்பதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அமைதியாக உட்காருங்கள்.

2007 ஜனவரி 22]

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கை விரைவில் நிறைவேற்றப்படும்.

திரு. த. தியோடர் ரெஜினால்டு: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன்.

திரு. க. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 வருடத்திற்கு முன்பு F.F.D.A. என்று, மீன் வளர்ப்பாளர்களுக்கு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன அது?

திரு. க. இராஜேந்திரன்: மீன் வளர்ப்பவர்களுக்கு உதவியாக F.F.D.A. அலுவலகம் இருந்தது. இப்பொழுது அது செயல்படவில்லை. அதேபோல், மீன் துறைக்கும், மின் துறைக்கும் சம்பந்தப்பட்ட கேள்வி. மீன் வளர்ப்பாளர்களுக்கு—உள்நாட்டு மீன் வளர்ப்பாளர்கள், கட்லா, ரோகு, மிருகால் வளர்ப்பாளர்களுக்கு, ஆந்திராவில் 3 H.P.–க்கு மாத வாடகை அனுமதிக்கின்றார்கள். அதேபோல, தமிழ்நாட்டிலும் 3 H.P.–யிலிருந்து 10 H.P.–க்குள் நீங்கள் அந்த horse power–ஐக் கணக்கு எடுத்து, மின் கட்டணம் வசூலிக்கப்படுமா என்று...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி, மீன் விற்பனை நிலையம் அமைப்பது சம்பந்தமானது.

திரு. க. இராஜேந்திரன்: இது மீன் துறைக்குச் சம்பந்தப்பட்ட கேள்வி, பேரவைத் தலைவர் அவர்களே. அதனால், இலவச மின்சாரம் வழங்கப்படுமா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாமல் இருப்பதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடும்படிக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]